முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1443

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.09.2023**, திங்கட்கிழமை

1. அறமெனும் சக்திமிகு வள்ளலே
அன்னதான சேவைகொண்ட ஞானகுருவே
வரம்தந்து உலகோரை மீட்க
வாழுகின்ற ஆறுமுக ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 25 ம் நாள், 11.09.2023, திங்கட்கிழமை)
இனிமேலும் அரங்கன் தொண்டர்படை
இவ்வுலகமெங்கும் இணையில்லா சக்தியாகப்பரவி
3. பரவியே கலியுகத்தைக் காக்கின்ற
பரோபகாரமிக்க ஞானப் படைகளாக
தரணியெங்கும் வலம் வந்து
இனிதே தர்மஞான லோகம் படைத்து
4. படைத்துமே கலியின் சிக்கல் அத்தனையும்
பஞ்சமாபாதகங்கள் அனைத்தும் அகற்றி
வலிமையான ஞான பூமியாக்கி
வல்லமையான ஞானத் தலைமை உருவாக்கி
5. ஆக்கியே உலகே ஞானலோகமாகும்
அரங்கன் அவதார நோக்கம் பூர்த்திபட
மகிழ மக்களுக்கு எல்லா வளமும்
மரணம் மறுமை போக்கிக் கூட இனிதே
6. இனிதே அற்புதத்தை நிகழ்த்தக் கூடும்
எல்லாம் அரங்கன் அறத்தின் மூலமாகும்
ஆகவே மாற்றம் சடுதி காணும்
அகத்தியர் சன்மார்க்க சங்க கிளைகள் மூலம்

7. மூலமாக இந்த உலகுக்கே பெருமாற்றம்
முருகப்பெருமான் யான் சூட்சுமமாக
நடத்தி பேருலகில் வலுவான ஞான ஆட்சியும் வல்லமையான
ஞானசித்தர் காலமும் ஆக ஆக்கி அருள் புரிவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–